**உயர்நிலை 4**

மரபுத்தொடர்கள் 62 - 76 / 85 - 104

இணைமொழிகள் 36 - 44 / 49 - 60

உவமைத்தொடர்கள் 36 - 44 / 49 - 60

பழமொழிகள் 43 - 53 / 58 - 72

62. எடுத்த எடுப்பில் - தொடக்கத்திலேயே

எடுத்த எடுப்பிலேயே டெம்பனீஸ் குழு இரண்டு கோல்கள் போட்டு வெற்றிக்கனியைத் தட்டிப்பறித்தது.

63. ஒத்துப்பாடுதல் - மறுத்துப்பேசாதிருத்தல்

பாலு தன் மேலதிகாரி சொல்லியவற்றிற்கெல்லாம் ஒத்துப்பாடியதால் பதவி உயர்வு பெற்றான்.

64. ஒரு காலில் நிற்றல் - பிடிவாதம்பிடித்தல்

கோபு தன் பிறந்த நாளுக்கு ஒரு சைக்கிள் வேண்டும் என்று ஒரு காலில் நின்று வாங்கினான்.

65. ஓடியாடிப்பார்த்தல் - கடின முயற்சி எடுத்தல்

தன் மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்த விரும்பிய பாலன் தானே ஓடியாடிப்பார்த்து எல்லாக் காரியங்களையும் செய்தார்.

66. கக்கவைத்தல் - உண்மையை வெளிக்கொணர்தல்

குற்றவாளியிடம் உண்மையைக் கக்கவைக்கக் காவலர்கள் சில சமயம் கடுமையாக நடந்துகொள்வார்கள்.

67. கழித்துக்கட்டுதல் - நீக்குதல்

நன்றாகப் பேசும் இருவரில் யாரைக் கழித்துக்கட்டுவது என்று ஆசிரியர் தடுமாறினார்.

68. கழுத்தறுத்தல் - ஏமாற்றுதல்

வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்திற்கு வருகிறேன் என்று சொன்ன பாலா கடைசி நேரத்தில் வரமுடியாது என்று கழுத்தறுத்துவிட்டான்.

69. காதுகுத்துதல் - ஏமாற்றுதல்

பள்ளிக்கு ஏன் வரவில்லை என்ற ஆசிரியரிடம் பாலா தன் பாட்டி இறந்துவிட்டார் என்று காது குத்தினான்.

70. கை நனைத்தல் - சாப்பிடுதல்

நம்மை மதிக்காதவர் வீட்டில் கை நனைக்கக்கூடாது.

71. கையைக் கடித்தல் - நஷ்டமடைதல்

தன் வியாபாரம் கையைக்கடித்ததால் கடையை மூடிவிட்டார்.

72. தலைமேற்கொள்ளுதல் - அதன்படி நடத்தல்

நெப்போலியனின் படையினர் அவன் கட்டளையைத் தலை மேற்கொண்டு போர்புரிந்தனர்.

73. பழி வாங்குதல் - பழி தீர்த்தல்

தன் கணவன் கோவலனைக் கொன்ற பாண்டியனின் தலைநகரை எரியூட்டி கண்ணகி பழிவாங்கினாள்.

74. வாயைக் கட்டுதல் - விரும்பியதை சாப்பிடாதிருத்தல்

மருத்துவரின் ஆலோசனைப்படி தனக்கு விருப்பமானதை உண்ணாமல் வாயைக்கட்டியதால் நீண்டநாள் உயிர்வாழ்ந்தார் ரகு.

75. விட்டுக்கொடுத்தல் - பிறருக்கு வழங்குதல்

இராவணனைக் கொன்று நாட்டைப்பெற்ற இராமன் அதை விபீஷணனுக்கு விட்டுக்கொடுத்தார்.

76. வெட்டிப்பேச்சு - வீண்பேச்சு

வெட்டிப்பேச்சு பேசி நேரம் கழிப்பதில் கமலாவுக்கு மிக விருப்பம்.

85. அள்ளிக்கொட்டுதல் - மிகுதியாகச்செலவு செய்தல்(பணம்/ வார்த்தை)

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பணத்தை அள்ளிக்கொட்டி செலவு செய்தார் அமெரிக்க அதிபர் புஷ்.

86. இடித்துரைத்தல் - வற்புறுத்திக் கூறுதல்

பாஞ்சாலியைத் துகிலுரியத் துணிந்த துச்சாதனனைச் சான்றோர் இடித்துரைத்தனர்.

87. இட்டுக் கட்டுதல் - இல்லாததைக் கூறுதல்

பாண்டிய மாதேவியின் சிலம்பைக் கோவலன் திருடியதாகப் பொற்கொல்லன் மன்னனிடம் இட்டுக்கட்டிக் கூறினான்.

88. ஈடேறுதல் - நிறைவேறுதல்

தீவிரவாதிகளை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் ஈடேறும் வரையில் போர் நடக்கும் என்று அமெரிக்கா கூறியது.

89. உச்சி குளிர்தல் - புகழ்ச்சியால் பெருமகிழ்ச்சி அடைதல்

தனக்கு செய்த உதவியை இராமன் பாராட்டியபோது அநுமன் உச்சி குளிர்ந்தான்.

90. உயிர்விடுதல் - மிகுதியான ஆசை கொள்ளுதல்

பொறித்த கோழி உணவிற்காக உயிர் விடுபவன் கோபு.

91. ஊர் சிரித்தல் - கேவலமாகப்பேசுதல்

மாதவி வீட்டில் தங்கி தன் செல்வத்தை இழந்த கோவலனைக் கண்ட ஊர் சிரித்தது.

92. எடுத்தெறிதல் - மதிக்காமல் பேசுதல்

சூதாடியது தவறு என்று தருமனை பீமன் எடுத்தெறிந்து பேசியபோது அர்ச்சுனன் அண்ணனை அவ்வாறு பேசாதே என்று கண்டித்தான்.

93. கண்பிதுங்குதல் - அதிகமாக வேலை செய்தல்

தன் மகனின் திருமண வேலைகள் அனைத்தும் தான் ஒருவரே செய்ததால் கந்தசாமியின் கண் பிதுங்கிற்று.

94. கரை கண்டவர் - மிகுதியான புலமை பெற்றவர்

தமிழ்ச் சங்கத்தின் தலைமைப்புலவரான நக்கீரர் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் கரை கண்டவர்.

95. கரையேறுதல் - நல்ல நிலைக்கு வருதல்

பாலன் படித்துப்பட்டம் பெற்றதால் வறுமையில் வாடிய அவன் குடும்பம் கரையேறியது.

96. கழுத்தில் கட்டுதல் - வற்புறுத்திக் கொடுத்தல்

தீபாவளிக்கு வீட்டைச் சுத்தம் செய்யும் வேலைகளை என் கழுத்தில் கட்டினர் என் பெற்றோர்.

97. கானல் நீர் - மாயத் தோற்றம்

படிக்காமல், கடுமையாக உழைக்காமல் வாழ்வில் முன்னேற வேண்டும் என்று நினைப்பது கானல் நீர் போன்றது.

98. சூளுரைத்தல் - சபதமிடுதல்

பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்டு, என் கணவன் கள்வன் அல்லன் என்று நிரூபிப்பேன் என்று சூளுரைத்தாள் கண்ணகி.

99. சூறையாடுதல் - கொள்ளையடித்தல்

அண்டை நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது பல கடைகள் சூறையாடப்பட்டன.

100. தலையாட்டிபொம்மை - எதற்கும் ஒத்துப்போதல்

எதற்கும் சரி சரி என்று கூறுகின்ற தலையாட்டி பொம்மையான பன்னீர் செல்வத்தை அனைவருக்கும் பிடிக்கும்.

101. தலையெடுத்தல் - குடும்பப்பொறுப்பை ஏற்றல்

என் மகன் தலையெடுத்த பிறகுதான் என் குடும்பம் சிறக்க முடியும் என்று தாய் கூறினார்.

102. பல்லவி பாடுதல் - சொன்னதையே சொல்லுதல்

தனக்கு எப்போதும் பணக் கஷ்டம் என்று பல்லவி பாடுவான் பாலு.

103. வெட்டிப்பேச்சு - வீண்பேச்சு

ஜப்பானில் வெட்டிப்பேச்சு பேசி வீண் பொழுது போக்குபவர்களைக் காணவே முடியாது.

104. வெள்ளை மனம் - கள்ளங்கபடமற்ற

வெள்ளைமனம் படைத்த ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தனை அவனுடைய அமைச்சன் கட்டியங்காரன் எளிதில் ஏமாற்றி அரசைக் கைப்பற்றினான்.

இணைமொழிகள்

36. ஏழை எளியவர் -

உலகில் இரண்டாவது மிகப்பெரிய கண்டமாகிய தென்னாப்பிரிக்காவில் ஏழை எளியவர் பலர் வாழ்கின்றனர்.

37. ஒட்டி உலர்ந்து -

வறுமையில் வாடும் பலர் உண்ண உணவில்லாமல் ஒட்டி உலர்ந்து காணப்படுகின்றனர்.

38. ஒப்பு உயர்வு -

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நமது சிங்கப்பூர் ஒப்பு உயர்வு அற்றுத் திகழ்கிறது.

39. கண்டது கேட்டது -

கண்டது கேட்டதைப் பிறரிடம் சொல்லாதே என்று அம்மா கண்டித்தார்.

40. குழலும் யாழும் -

குழலும் யாழும் எழுப்பும் இசையைவிடக் குழந்தையின் மழலை மொழி இனிமையானது என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

41. தாயும் சேயும் -

குஜராத் நில நடுக்கத்தில் மீட்கப்பட்ட தாயும் சேயும் நலமாக இருப்பதாகப் பத்திரிகை செய்தி கூறியது.

42. நன்மை தீமை -

ஒரு காரியத்தில் ஈடுபடும் முன் அதனால் விளையும் நன்மை தீமைகளை எண்ணிப்பார்க்க வேண்டும்.

43. போரும் பூசலும் -

ஒரு நாடு போரும் பூசலுமாக இருந்தால் அது வளர்ச்சி அடையாது.

44. மேளதாளம் -

தீபாவளி விளக்கேற்றுவிழா நிகழ்ச்சிக்கு வந்திருந்த அமைச்சரை மேளதாளத்துடன் வரவேற்றனர்.

49. உள்ளும் புறமும் -

மாரியம்மன் கோவிலின் உள்ளும் புறமும் தூய்மையாக இருந்தது.

50. ஓட்டை உடைசல் -

தீபாவளியை முன்னிட்டு அம்மா வீட்டில் இருந்த ஓட்டை உடைசல் பாத்திரங்களைக் கழித்துக்கட்டிவிட்டுப் புதிதாக வாங்கினார்.

51. கரடு முரடு -

பண்டைக்காலத்தில் நம் நாட்டில் கரடு முரடாகக் கிடந்த இடங்களை எல்லாம் சீர்படுத்திச் சாலைகளை அமைத்தவர்கள் தமிழர்கள்.

52. கல்வி கேள்வி -

இன்று தமிழர்கள் நம் நாட்டில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குகின்றனர்.

53. சாடை மாடையாய் -

கடந்த சில நாட்களாகப் புகை பிடிக்க ஆரம்பித்த ராஜரத்தினத்திடம் அவன் நண்பன் அது தவறு என்று சாடைமாடையாய்க் கூறினான்.

54. சொத்துசுகம் -

போரினால் ஆப்கானியர்கள் பலர் சொத்து சுகங்களை இழந்தனர்.

55. நாடு நகர் -

சூதாடிய காரணத்தால் தருமன் நாடு நகரை இழந்தான்.

56. மப்பும் மந்தாரமும் -

இன்று சிங்கப்பூரில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் வானிலை அறிக்கை கூறியது.

57. மணியும் ஒளியும் -

மணமக்கள் மணியும் ஒளியும் போல வாழ வேண்டும் என்று வாழ்த்தினர் சான்றோர்.

58. மலரும் மணமும் -

வள்ளுவரும் வாசுகியும் மலரும் மணமும் போல இணைபிரியாது வாழ்ந்தனர்.

59. வம்பு தும்பு -

நாம் அண்டை வீட்டாருடன் வம்பு தும்பு இல்லாமல் வாழ வேண்டும்.

60. வாட்ட சாட்டம் -

வாட்ட சாட்டமாக இருந்த தேவனிடம் நட்புகொள்ளப் பல பெண்கள் விரும்பினர்.

உவமைத்தொடர்கள்

36. தாயைக் கண்ட சேயைப்போல -

தாயைக் கண்ட சேய்போல சூரியனைக் கண்டதும் தாமரை மலர்ந்தது. சந்திரனைக் கண்டதும் அல்லி மலர்ந்தது.

37. நுனிப்புல் மேய்ந்தாற் போல -

தேர்வுக்குத் தொடக்கத்திலிருந்து படிக்காமல் இறுதியில் நுனிப்புல் மேய்ந்தார்ப்போல் ஒரு சிலர் படிப்பர்.

38. நகமும் சதையும் போல -

அன்னமும் சொர்ணமும் நகமும் சதையும் போலப் பழகினர்.

39. பசுமரத்தில் ஆணி அறைந்தாற் போல -

ஆசிரியர் கற்றுக் கொடுத்த பாடம் பசுமரத்தில் ஆணி அறைந்தாற் போல என் மனதில் பதிந்தது.

40. பல்பிடுங்கின பாம்பு போல -

41. பழ மரம் நாடிய பறவை போல -

கடையேழு வள்ளல்களை நாடிப் புலவர்கள் பழமரம் நாடிய பறவை போலச் சென்றனர்.

42. பாம்புக்குப் பால் வார்த்தாற் போல -

போதைப்புழங்கிகளுக்கு வீட்டில் இடம் கொடுப்பது பாம்புக்குப் பால் வார்த்தாற் போன்றது.

43. புலியைக் கண்ட மான் போல -

குண்டர் கும்பல் தலைவன் காவலரைக் கண்டதும் புலியைக் கண்ட மான் போல அஞ்சி ஓடினான்.

44. வெயிலில் இட்ட புழுப்போல -

தன் கணவன் பாண்டிய மன்னனால் கொல்லப்பட்டான் என்று கேட்ட கண்ணகி வெயிலில் இட்ட புழுப்போலத் துடித்தாள்.

49. அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு போவது போல -

பிள்ளையை வீட்டில் தூங்கவைத்துவிட்டு அவசரமாக வெளியில் சென்ற தாய் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு போவதுபோலச் சென்றாள்.

50. அவசரக்கோலம் அள்ளித் தெளித்தது போல -

உரிய காலத்தில் செய்யாமல் ஒப்படைப்பை இறுதி நேரத்தில் அவசரக் கோலம் அள்ளித் தெளித்ததுபோல ஒப்படைத்தான்.

51. அன்ன நடை கற்கப்போய்த் தன்னடையும் இழந்தாற்போல -

மேற்கத்திய இசையைக் கற்கச் சென்ற பாலா அன்ன நடை கற்கப்போய்த் தன்னடையும் இழந்தாற்போல தான் முன்னே கற்றிருந்த பாரம்பரிய இசைக் கலையையும் மறந்துவிட்டான்.

52. ஆகாயத்தில் கட்டிய கோட்டை போல -

படிக்காமல் முதல் மதிப்பெண் பெறுவேன் என்று இறுமாந்து கூறிய கண்ணன் தேர்வு முடிவுகள் வந்ததும் தன் கனவு ஆகாயத்தில் கட்டிய கோட்டை போல ஆனதைக் கண்டு வருந்தினான்.

53. ஏறவிட்டு ஏணியை வாங்கினது போல -

தமிழ் மணியை மாணவர் தலைவனாக்கிய ஆசிரியர் ஏறவிட்டு ஏணியை வாங்கினது போல இப்போது அவனை நீக்கிவிட்டு மாறனை நியமித்து விட்டார்.

54. ஒளியைக் கண்ட இருள் போல -

காவலரின் வருகையைக் கண்ட போதைப் புழங்கிகள் ஒளியைக் கண்ட இருள் போல ஆயினர்.

55. கண்ணில்லார் பெற்று இழந்தாற் போல -

தத்தெடுத்த பிள்ளை இறந்ததும் கபிலன் கண்ணில்லார் பெற்று இழந்தாற் போன்ற நிலையை அடைந்தான்.

56. பழம் நழுவிப்பாலில் விழுந்தாற் போல -

பழம் நழுவிப்பாலில் விழுந்தாற் போல எதிர்பாராத கிடைத்த விடுமுறை நாளான இன்று என் மாமாவும் வந்தார்.

57. போர் முனையிலே ஆயுதம் தேடுதல்போல -

போர் முனையிலே ஆயுதம் தேடுதல்போல தேர்வு நேரத்தில் மட்டும் புத்தகத்தைத் தேடக்கூடாது.

58. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற் போல -

பெற்றோர், தங்களை எதிர்த்துப் பேசிய பாலனை வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற் போலப் பேசிவிட்டானே என்று வருந்தினர்.

59. முழுப்பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது போல -

சீனிவாசன் தேர்வில் தான் தோல்வி அடைந்ததைப் பெற்றோரிடம் கூறாது முழுப்பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது போல மறைக்க முயற்சித்தான்.

60. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல -

மாணவர்களின் தவறுகளை ஆசிரியர் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மாணவர்களின் மனம் புண்படாமல் சுட்டிக் காட்டினார்.